கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 09.12.2021 அ.வ.எண். 1/2017 வா.சா.1 திருமலைசாமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முதல்விசாரணை தொடர்ச்சி

31.10.1949 ம் தேதியில் சேதுராமசாமிகவுண்டர் என்பவர் சுப்பேகவுண்டருக்கு எழுதிக்கொடுத்த கிரையசாசனத்தின் சான்று நகல் வா.சா.ஆ.1 ஆகும். 04.11.1904 தேதியில் சின்னக்காள் மற்றும் ரங்கம்மாள் ஆகியோர் ரங்கம்மாள் என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய சாசனம் சான்று நகல் வா.சா.ஆ.2 ஆகும். 13.7.2016 தேதியில் எனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.3 ஆகும். மேற்படி அறிவிப்பை 1, 2, 4, மற்றும் 5 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.4 முதல் 7 வரையிலாகும். மேற்படி அறிவிப்பை 3ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பியதை காட்டும் அஞ்சல் உறை வா.சா.ஆ.8 ஆகும். என் பெயருக்கு மயிலாத்தாள் எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரம் அசல் வா.சா.ஆ.9 ஆகும். தாவாப்படி தீர்ப்பாகவேண்டுகிறேன்.

குறுக்குவிசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**ஒப்பம்)/- P. சுபாஷினி**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி